# ஓரியண்ட் எலெக்ட்ரிக் அறிமுகப்படுத்தும்

# 'அமைதியும், ஆற்றலும்' மிகுந்த ஏரோக்வைட் சீலிங் மின்விசிறி




கோவை : பல்வேறு துறைகளில் முத்திரை பதித்து ஆண்டுக்கு 1.6 பிலியன் அமெரிக்க டாலர் விற்று முதல் ஈட்டும் சி கே பிர்லா குழுமத்தின் ஓர் அங்கமான ஓரியண்ட் எலெக்ட்ரிக் நிறுவனம், அமைதியும், ஆற்றலும் மிகுந்த காற்றோட்டத்துடன் கூடிய தனது புத்தம் புதிய ஏரோக்வைட் சீலிங் மின்விசிறியை இன்று அறிமுகப்படுத்தி உள்ளது. ஏரோக்வைட் புதிய தரக் கட்டுப்பாடுகள் மற்றும் வித்யாசமான வடிவமைப்பு காரணமாக ஈடு இணையற்ற செயல்பாட்டிற்கு உத்தரவாதம் தருகிறது. சிறப்பான செயல்பாட்டிற்கு ஆற்றல் மிகு மோட்டார், அதிகபட்ச காற்றோட்டத்திற்கு 3டி ஏரோடைனமிக் வடிவமைப்பு எனப் பிரத்யேகச் சிறப்பு அம்சங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய சீலிங் மின் விசிறி அறிமுகம் குறித்து ஓரியண்ட் எலெக்ட்ரிக் நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவர் - மின் விசிறி வணிகப் பிரிவு தலைவருமான சமீர் டாண்டன் கூறுகையில் 'புதுமை என்ற பெயரில் கடந்த காலங்களில் மின்விசிறிகள் அழகுபடுத்தப்பட்டாலும், அடிப்படையில் எந்த மாற்றமும் இன்றி அப்படியேதான் உள்ளன.

எனவே இந்தக் குறையை நீக்கும் வகையில், முதல் முறையாக மின்விசிறிகள் தயாரிப்பில் மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்கி இருக்கிறோம். அதாவது 'அமைதி' என்னும் முக்கியமான விஷயத்தில் கவனம் செலுத்தி, 'ஏரோக்வைட்' சீலிங் மின் விசிறிகளை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்த மின்விசிறி அறிவும் ஆற்றலும் மிகுந்த இன்றைய தலைமுறை நுகர்வோருக்காக அறிமுகப்படுத்தப்படுகிறது' என்றார்.

ஓரியண்ட் ஏரோக்வைட் சீலிங் மின் விசிறியின் சுழற்சி 1200எம்எம் ஆகும். உயர் ரக கிளாஸ் ஃபில்ட் காம்பவுண்ட் ஏபிஸ் தொழில்நுட்பம் பிளேட்களுக்கு உறுதி அளிப்பதுடன், 100% துருப்பிடிக்காத தன்மையையும் அளிக்கிறது. இதன் 18 போல் ஹெவி மோட்டார் மற்றும் இரட்டை பால் பேரிங் ஆகியவை சத்தம் இல்லாத அமைதியான சுழற்சிக்கு உத்தரவாதம் தருகிறது. இதன் எழிலான வளைவுகள் உயர் ரக க்ளாஸி பிரிமியம் பியூ ஃபினிஷ் ஆகியவை அழகுக்கு மேலும் மெருகேற்றுகின்றன. ஸ்பிண்டில் உறையுடன் கூடிய மேல் மற்றும் கீழ்ப்பகுதி கேனொபியின் ஒருங்கிணைந்த வடிவமைப்பு மற்றும் மேல் பகுதி எஃகு அலங்கார ரிம் இதன் பிரிமியம் தரத்திற்குக் கூடுதல் மதிப்பைத் தருகின்றன.